தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1975 மார்ச் 22.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

தொப்பையாற்றின் குறுக்கே அணை.

*419 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், தொப்பையாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இந்தத் திட்டத்திற்கான தீர்வான மதிப்பீடு தலைப் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் எவ்வளவு ஏக்கரா பாசனத்திற்குக் கொண்டுவர பிரயோசனப் படும் என்ற முழு விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தொப்பையாறு என்ற ஆற்றின் குறுக்கே கட்ட இருக்கிற தேக்கம் 500 மிலியன் கன அடி கொள்ளளவு கொண்டதாக இருக்கக்கூடும். சுமார் 2,156 ஏக்கர் புஞ்சை நிலம் நஞ்சை நிலமாக மாற்றியமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். உணவு உற்பத்தி 2,168 டன் கூடுதலாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தத் திட்டத்திற்குத் தோராய மதிப்பீடு 129 இலட்ச ரூபாய் ஆகலாம். இத்திட்டம் இன்னும் தலைப் பொறியாளர்களால் ஆய்வு செய்யப் பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இத்திட்டம் எப்பொழுது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது? இதுவரையில் அதுபற்றிய பரிசீலனை முடியாமல் இருப்பதற்கு என்ன காரணம்? விரைவில் அதை முடிக்க அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இத் திட்டம் சமீபத்தில்தான் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது இன்னும் பரிசீலனையில் தான் இருக்கிறது. பரிசீலனை முடிந்து அரசுக்கு வந்த பிறகு, நிதி நிலையைப் பொறுத்து ஆராய்ந்து அரசு ஒப்புதல் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, தொப்பையாறுத் திட்டம் பற்றி வருஷம் பூராவும் இம்மாதிரி கேள்வி கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். அரசாங்கம் சீக்கிரம் நடவடிக்கை எடுக்கவில்லை. போக்குவரத்துக்கு இணைப்புப்பாதை அமைக்க வேண்டியது மிக மிக அவசியம். ஆகவே, அதை விரைவாக எடுத்து முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அந்த அவசியத்தை உணர்ந்துதான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளச் சொல்லி, விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. மேற்கொண்டு டீடெய்ல்டு இன்வெஸ்டிகேஷன் முடிந்த பிறகு அரசு அதைப்பற்றி பரிசீலித்து ஒரு முடிவு எடுக்கும்.

லெட்சுமிபுரத்தில் புதிய கண்மாய்

*420 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் ஆண்டி பட்டி தொகுதியைச் சேர்ந்த லெட்சுமி புரத்திற்கு கண்மாய் அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(இ) அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இத் திட்டத்தின் மதிப்பு ரூ. 10 லட்சம். லெட்சுமிபுரம் அருகிலுள்ள 288 ஏக்கர் நிலங்களுக்கு புதிதாக பாசன வசதி அளிக்கும். 202 டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு வழி வகுக்கும்.

திரு. கே.டி.கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இலட்சுமிபுரம் கண்மாய் போன்ற கண்மாய்கள் அமைப்பதன் மூலமாக பக்கத்தில் தண்ணீர் ஊற்று வர வசதியாக இருக்கும். பல்லவ அரசர்கள் காலத்தில் இப்படிப்பட்ட கண்மாய்களை அதிகமாக அமைத்தார்கள். அவற்றில் தூர்ந்து போயிருக்கக்கூடிய கண்மாய்கள் மதுரை மாவட்டத்தில் பல இருக்கின்றன. அவற்றை எல்லாம் மராமத்து செய்து புதுப்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?